# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 20.01.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 115 மற்றும் 116 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

*பொருள்: அவர்கள் அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். நன்மையை நேசிக்கின்றனர். தீமையைத் தடுக்கின்றனர். நற்செயல்களில் ஒருவருக்கொருவர் முன்னேறவும் செய்கின்றனர். இத்தகையோரே நல்லவர்களாவர். அவர்கள் செய்யும் நன்மைகளில் எதுவும் மதிக்கப்படாமல் இருப்பதில்லை. மேலும் அல்லாஹ் இறையச்சம் உடையோரை நன்கு அறிகிறான். (3:115,116)*

நன்மையை ஏவுவது, தீமையிலிருந்து தடுப்பது,தன்னை சீர்திருத்தம் செய்வது, நன்மையை ஒருவரையொருவர் முன்னேறிச் செல்வது போன்றவையே நான் ஓதிய வசனங்களில் மூஃமின்களின் அடையாளமாக கூறப்பட்டுள்ளது. இது சூரா ஆலி இம்ரானின் வசனங்களாகும். இந்த அதிகாரத்தில் இந்த கருத்துக்கள் வேறு சில இடங்களிலும் கூறப்பட்டுள்ளது. இந்த விஷயங்கள்தான் மனிதனை நல்லடியார்களாக ஆக்குகின்றது. இந்த விஷயங்கள் ஈமானில் உறுதிப்பாடு ஏற்படுவதன் அடையாளமாகும். மேலும் இந்த விஷயங்கள்தான் வெற்றியின் அருகில் கொண்டு வருபவையாகும். ஏனென்றால், அல்லாஹ் தனது கட்டளையின்படி அமல் செய்யக் கூடியவர்களின் செயல்களை வீணாக்கமாட்டான். ஆகையால் நற்செயல்கள் செய்யக் கூடியவர்களுக்கு, நன்மையைப் பரப்பக் கூடியவர்களுக்கு, நன்மையில் முன்னேறக் கூடியவர்களுக்கு அல்லாஹ் அருள் செய்கின்றான்.

ஆனால், நான் ஓதிய மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். நான் அலீம் ஆவேன். ஆலிமுல் கையிபி வஷ்ஷஹாதாவாக இருக்கின்றேன். அதாவது மறைவானவற்றையும் அறிகின்றேன். வெளிப்படையானவற்றையும் அறிகின்றேன். மேலும் நீங்கள் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலையும் எந்த நோக்கத்தோடு அது செய்யப்படுகிறது என்பதையும் நான் அறிவேன். அது இறையச்சத்துடன் செய்யப்படக் கூடியதாக இருந்தால் நிச்சயமாக அல்லாஹ் தனது கருணையின் அரவணைப்பில் அவரை எடுத்துக் கொள்வான். இது நம்மீது அல்லாஹ்வுடைய மாபெரும் கருணையாகும். அதாவது அவன் இந்த குழப்பம் நிறைந்த காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியை அனுப்பியுள்ளான். காலத்தின் இமாமை அனுப்பியுள்ளான். மேலும் நமக்கு இந்த வாய்ப்பினையும் வழங்கியுள்ளான். அதாவது அவரை ஏற்றுக் கொண்டு, அவரிடம் இவ்வாறு உறுதி அளித்துள்ளோம். நாம் அல்லாஹ் காட்டித்தந்த வழியின்படி நமது ஈமானின் தரத்தை இந்தக் காலத்தில் அன்னார், திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் அடிப்படையில் கொடுத்த விளக்கத்திற்கேற்ப மேம்படுத்துவோம். அல்லது மேம்படுத்த முயற்சி செய்வோம் என்று வாக்குறுதி அளித்துள்ளோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நாவினை இறை விருப்பத்திற்கு எதிராக பேசுவதிலிருந்து தடுப்பது எவ்வளவு அவசியமோ அதனைப் போன்றே உண்மையினை வெளிப்படுத்துவதற்கு அதை பயன்படுத்துவது அவசியமாகும்.

அதாவது தீமையிலிருந்து நாவினைத் தடுப்பது அவசியமானது என்றால் உண்மையினைப் பேசுவதற்கு உண்மையான விஷயங்களை எடுத்துரைப்பதற்கு வாயைத் திறப்பதும் அவசியமானதாகும்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

*யஃமுரூன பில் மஃரூபி, வ யன்கவ்ன அனில் முன்கர்* என்பது மூஃமின்களின் மேன்மையாகும். நன்மையை ஏவுவது, தீமையைத் தடுப்பதற்கு முன்பு செய்ய வேண்டிய அவசியமான ஒன்றாகும். அதாவது மனிதன் இந்த ஆற்றலைத் தன்னிடம் வைத்துள்ளான் என்பதனை நிரூபித்துக் காட்ட வேண்டும். இந்த விஷயங்களை நாம் பேசுகின்றோம் என்றால் செயல் ரீதியில் இதனை நிரூபணமும் செய்ய வேண்டும். அதாவது நான் கூறக்கூடிய நல்ல விஷயங்கள் என்னிடம் உள்ளது என வெளிப்படுத்த வேண்டும்.

**மேலும் கூறுகின்றார்கள்:**

பிறரிடம் நல்ல விளைவை ஏற்படுத்துவதற்கு முன்பு, தனது நிலையைப் பற்றி ஆராந்து பார்க்க வேண்டும்.

எனவே நினைவில் கொள்ளுங்கள். நாவினை நன்மையினை ஏவுவதில் இருந்தும், தீமையைத் தடுப்பதிலிருந்தும் ஒருபோதும் தடுக்காதீர்கள். ஆம்! சந்தர்ப்ப சூழ்நிலை அறிந்து பேசுவதும் அவசியமாகும். பேசும் போது மென்மையையும் எளிமையையும் கைளாக வேண்டும். இதனைப் போன்றே தக்வாவிற்கு எதிராக வாயைத் திறப்பதும் மாபெரும் பாவமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு, நமது பொறுப்புகள் அதிகமாகி விடுகின்றன. அதாவது நாம் இந்த தரத்தினை அடைய வேண்டும். மேலும் நமது ஒவ்வொரு சொல்லும், செயலும் நன்மைகளைப் பரப்பக்கூடியதாகவும், தீமைகளைத் தடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு இல்லையென்றால், நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வருவதால் எந்தப் பலனும் அளிக்காது. மாறாக, ஒருவேளை நாம் இதன் மூலமாக அல்லாஹ்வின் கோபத்தைப் பெறக்கூடியவர்களாக ஆகி விடுவோம். ஏனெனில் ஒரு வாக்குறுதி அளித்து அதனை நிறைவேற்றாமல் இருக்கின்றோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் மீண்டும் மீண்டும் கூறியிருக்கின்றேன். எந்த அளவு ஒரு மனிதன் நெருக்கத்தினைப் பெறுகின்றானோ அதே அளவு அவன் விசாரணைக்கும் தகுதியானவன் ஆகின்றான். மேலும் தூரமாக இருப்பவர்கள் இந்த அளவு விசாரணைக்கு தகுதியானவர்கள் அல்லர். ஆனால் நீங்கள கண்டிப்பாக விசாரிக்கப்படுவீர்கள். உங்களிடம் அவர்களை விட ஈமானின் முன்னேற்றம் அதிகமாகவில்லை என்றால், உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது?

எனவே, நாம் இந்த விஷயத்தில் அதாவது நாம் இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம் என மகிழ்ச்சி அடைந்து விட வேண்டாம். மாறாக, இப்போது நமது நிலையில் முன்பை விட அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இல்லை என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று உங்களுக்கு விசாரணை உண்டு; கேள்வி கேட்கப்படும்.

ஒருவர் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொண்டு அதன்படி செயல்படவில்லை என்றால், அவர் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொண்டார் என்பதற்காக கேள்வியிலிருந்து, பிடியிலிருந்து தப்பிக்க முடியாது. ஒருவருடைய அமல் இறைபோதனைகளுக்கேற்ப இல்லையெனில் அவர் ஜமாஅத்திற்கு தொண்டு புரிகிறார்; அல்லது ஜமாஅத்தின் பணிகளில் நியமிக்கப்படுகிறார் என்றால், அல்லது ஏதாவதொரு பொறுப்பில் அமர்த்தப்படுகிறார் என்றால் அது அவரை கேள்வி மற்றும் பிடியிலிருந்து காப்பாற்ற முடியாது. அதே போன்று ஒருவர் இறைபோதனைகளின் படி செயலாற்றவில்லை என்றால், அவர் ஒரு குடும்பத்தின் உறுப்பினராக இருப்பதோ அல்லது சான்றோர்களுக்கு தொண்டு செய்வதோ அவரை பிடியிலிருந்து காப்பாற்ற முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் தெளிவாக ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

வெறும் பைஅத் செய்வதன் மூலம் பின்பற்றக்கூடியவர்களின் அருட்கொடைகளுக்கு வாரிசாகி விட முடியாது.

உறுதியாக நம்புங்கள். அல்லாஹ்வின் பார்வையில் சிறந்த ஆடைகள் கொண்டவர்களும், மிகவும் வசதி படைத்தவர்களும், மகிழ்ச்சியாக இருக்கக் கூடியவர்களும் பிரியமானவர்கள் இல்லை. மாறாக அல்லாஹ்வின் மத்தியில் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பவர்களும், தூய்மையான முறையில் இறைவனுக்காகவே ஆகக் கூடிய மக்களும் இறைவனுக்கு பிரியமானவர்கள் ஆவர்.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:**

அவனது ஏனைய வாக்குறுதிகள் தவிர இதுவும் ஒரு வாக்குறுதியாகும். அதாவது, *வஜாயிலுல்லதீனத் தபஊக்க ஃபவ்கல்லதீன கஃபரூ இலா யவ்மில் கியாமா - உம்மைப் பின்பற்றுபவர்களை காஃபிர்கள் மற்றும் நிராகரிப்பவர்களுக்கு எதிரில் மறுமை வரை மேன்மையை வழங்குவேன்.*

கூறுகின்றார்கள்: இது உண்மையாகும். அதாவது என்னைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு, என்னை மறுக்கக் கூடியவர்கள் மீதும், எனது எதிரிகள் மீதும் வெற்றியினை வழங்குவான். ஆனால் சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் பின்பற்றக்கூடியவர்கள் என்பதில், என் கையில் பைஅத் செய்த ஒவ்வொருவரும் அடங்கமாட்டார்கள். எப்போதுவரை தன்னிடம் பின்பற்றும் நிலையை முழுமையாக ஏற்படுத்தமாட்டாரோ அப்போது வரை பின்பற்றக் கூடியவர்களில் சேர மாட்டார்.

எனவே நாம் அதிகமாக சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது. அல்லாஹ் மூஃமின்களின் அடையாளமாக அவர்கள் நன்மையை ஏவுகின்றனர். தீமையைத் தடுக்கின்றனர். நற்செயல்களில் ஒருவரையொருவர் முந்திச் செல்கின்றனர் என்று கூறியுள்ளான்.

நாம் இதன் முழு அடையாளமாக மாறுவதும், உண்மையான மூஃமினாக அழைக்கப்படுவதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை அடியாராகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அறிவுரைகள், கூற்றுகளின்படி அமல் செய்யும் போதுதான் நடைபெறும். மேலும் அன்னார் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையின்படி முழுமையாக செயல்படும் போதுதான் நடைபெறும்.

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்துள்ளேன். இது நமது மார்க்க மற்றும் ஆன்மீக நிலைகளை சரி செய்வதற்கும், பௌதீக முன்னேற்றத்திற்கும் இவை அவசியமானதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று நாம் அன்னார் கூறிய விஷயங்களின் மீது முழுமையாக கவனம் செலுத்தாமல், அதன்படி அமல் செய்ய முயற்சி செய்யவில்லை என்றால் பிறகு நாம் முழுமையாகப் பின்பற்றக்கூடியவர்கள் என்று அழைக்கப்பட மாட்டோம்.

இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட மிகப்பெரிய பணி, இஸ்லாத்தின் தூதுச் செய்தியினை உலகம் முழுவதும் கொண்டு செல்வதாகும். மேலும் அன்னாரைப் பின்பற்றக் கூடியவர்களது பணிவும் இதுவேயாகும். இதற்காக நாம் ஒரு முன்மாதிரியாகத் திகழ்வது அவசியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னரே கூறியிருக்கின்றார்கள். அதாவது முதலில் உங்களது நிலையை மற்றவர்கள் மீது விளைவை ஏற்படுத்தும் அளவிற்கு மாற்ற வேண்டும். அப்போதுதான் மற்றவர்கள் மீது உங்களுடைய தாக்கம் ஏற்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமது சொல், செயல் ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

இவை அனைத்தும் வெறும் பேச்சிற்காகவும் பாசாங்கு செய்வதற்காகவும் பிறருக்கு காட்டுவதற்காக மட்டுமே இருக்கும் என்றால், பிறகு நமக்கும் மற்றவர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கின்றது? மேலும் மற்றவர்களை விட நமக்கு என்ன மேன்மை இருக்கின்றது? எனவே நீங்கள் செயல்ரீதியில் ஒரு முன்மாதிரியை வெளிப்படுத்துங்கள். மேலும் அதில் ஒரு ஒளி இருக்க வேண்டும். அதனை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு இருக்க வேண்டும். ஏனென்றால் அதில் ஒளி இல்லாத வரை அதை எவரும் ஏற்க மாட்டார்கள்.

எனவே, இது ஆன்மாவுடைய அக மற்றும் புறத் தூய்மையின் ஒளி ஆகும். இதனைத்தான் நாம் நமது நிலையில் ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் நாம் இதன் மூலம் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றக்கூடியவர்களாக வேண்டும். மேலும் அன்னாருடன் செய்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்றுபவர்களாக வேண்டும்.

**மேலும் பிறிதோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:**

நாம் வெறுமனே பேசிக் கொண்டே இருக்கின்றோம் என்றால், நினைவில் கொள்ளுங்கள். இது எந்தப் பலனும் தராது. வெற்றி பெறுவதற்கு இறையச்சம் அவசியமாகும். வெற்றி வேண்டும் என்றால் இறையச்சம் உடையவராக மாறுங்கள்.

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் இறையச்சம் உடையவரை நேசிக்கின்றான். இறைவனுடைய மேன்மையை நினைவில் கொண்டு அனைவரும் அச்சம் கொள்ளுங்கள். இறையச்சத்தை உள்ளத்தில் மேற்கொள்ளுங்கள். அவனது அன்பு மற்றும் அச்சத்தை உள்ளத்தில் ஏற்படுத்துங்கள்.

**கூறுகின்றார்கள்:** அனைவரும் இறைவனுடைய அடியார்கள் ஆவர். எவர் மீதும் அநீதியிழைக்காதீர்கள்; கோபம் கொள்ளாதீர்கள். மேலும் எவரையும் ஏளனமாகப் பார்க்கதீர்கள். **ஜமாஅத்தில் ஒருவர் கெட்டவராக இருந்தாலும் அவர் அனைவரையும் கெடுத்து விடுகிறார்.** சினம் கொள்வதன் பக்கம் அதிகமாக ஈர்க்கப்படுகின்றீர்கள் என்றால், அதாவது விரைவாக கோபம் அடைகின்றீர்கள் என்றால், உங்களது உள்ளத்தை ஆராயுங்கள். இந்த சினம் எந்த ஊற்றிலிருந்து வெளிவந்துள்ளது. இந்த கோபத்திற்கான காரணம் என்ன?

**கூறுகின்றார்கள்:** இந்த நிலைமை மிகவும் நுண்ணியதாகும். கோபம் ஒரு இயற்கையான விஷயமாகும். ஆனால் கோபத்திற்கு அடிமையாகி விடக்கூடாது. மாறாக ஒரு மூஃமினுக்கு கோபம் வருவது சீர்திருத்தத்திற்காக இருக்க வேண்டும்.

**பிறிதோரிடத்தில் கூறுகின்றார்கள்:** அனைவரிடமும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். சகோதரர்களுக்கும் சில உரிமைகள் இருக்கின்றன. அவர்களிடமும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் இறை விருப்பத்திற்கு மாற்றமான செயல்களைச் செய்தால், அதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். இறையச்சம் எதில் இருக்கிறது? மேலும் அதன் தரம் எப்படி இருக்க வேண்டும்? என்பதைப் பற்றி எடுத்துரைத்தவாறு **கூறுகின்றார்கள்:**

இறையச்சம் இதில்தான் இருக்கின்றது. அதாவது மனிதன், தன்னுடைய சொல்லும் செயலும் ஒத்துப்போகின்றதா? என்பதைப் பார்க்க வேண்டும். பிறகு அதில் தனது சொல்லும், செயலும் ஒன்றாக இல்லையென்றால், அவர் இறை கோபத்திற்கு ஆளானவர் ஆவார். தூய்மையற்ற உள்ளத்திலிருந்து மிகவும் தூய்மையான சொல் வெளி வந்தாலும் அந்த உள்ளம் இறைவனது பார்வையில் மதிப்பற்றதாகும். மாறாக அது இறை கோபத்தைத் தூண்டக் கூடியதாக இருக்கும்.

எனவே எனது ஜமாஅத் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் என்னிடம் இதற்காகத்தான் வந்துள்ளார்கள். அதாவது விதைக்கப்பட வேண்டும். இதன் மூலம் அவர்கள் கனிகள் நிறைந்த மரம் ஆக வேண்டும் என்பதாகும். எனவே ஒவ்வொருவரும் தனது அகம் எவ்வாறு உள்ளது? என ஆராய்ந்து பார்க்க வேண்டும். மேலும் அவரது புறம் எவ்வாறு உள்ளது? என்பதையும் பார்க்க வேண்டும். நமது ஜமாஅத்தில் வாயளவில் ஒன்றும் உள்ளத்தளவில் மற்றொன்றுமாக இருக்கக் கூடியவர்கள் இருந்தால், அவர்களது முடிவு நல்லதாக இருக்காது.

**கூறுகின்றார்கள்:** அல்லாஹ், உள்ளத்தை ஒன்றுமில்லாமல் வெறும் வாயளவில் வாதம் புரியக் கூடிய நிலையில் காணும் போது, தன்னிறைவு பெற்ற இறைவன் அதில் கவனம் செலுத்தமாட்டான்.

**அன்னார் கூறுகின்றார்கள்:** பத்ர் போரின் வெற்றியைப் பற்றிய முன்னறிவிப்பு வந்து விட்டது. எல்லா பக்கமும் வெற்றி பெறுவதற்கான நம்பிக்கையும் இருந்தது. இருந்தும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழுது அழுது துஆ செய்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், எல்லா வகையில் வெற்றி பெறுவதற்கான வாக்குறுதி இருக்கும் போது, அழுது அழுது மன்றாட வேண்டிய அவசியம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இறைவன் தன்னிறைவு பெற்றவன் ஆவான். இறை வாக்குறுதியில் ஏதாவது மறைமுக நிபந்தனைகள் இருக்க வாய்ப்பிருக்கலாம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இறைவன், வெற்றிக்கான வாக்குறுதியினை வழங்கியிருந்தான். இருந்தும் கூட பத்ர் மைதானத்தில் அழுது அழுது துஆ செய்தார்கள். ஹதீஸில் வருகிறது: எந்த அளவு அவர்கள் அழுது அழுது துஆ செய்தார்கள் என்றால், அவர்களது தோள்களிலிருந்து போர்வை பலமுறை கீழே விழுந்தது. அந்த அளவு பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் உருக்கத்துடன், ஏதாவது மறைமுக நிபந்தனை இருக்கலாம் என நினைத்து துஆ செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னேற்றத்திற்கு மறைவான நிபந்தனைகள் இருந்தன என்றால், அன்னாரின் வெற்றிக்கு மறைவான நிபந்தனைகள் இருந்தன என்றால், பிறகு வேறெவருக்கு மறைவான நிபந்தனைகள் இல்லாமல் இருக்கும்? எனவே அல்லாஹ்வுடைய இரகசியத்தை யாரும் அறியமாட்டார்கள். எனவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே தூய்மையாக்குவது அவசியமாகும்.

**பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:** இறையச்சம் உடையவர்களுக்குரிய நிபந்தனை என்னவென்றால், அவர் தனது வாழ்க்கையை, ஏழ்மையாகவும், எளிமையாகவும் வாழ வேண்டும். இது தக்வாவின் ஒரு கிளை ஆகும். இதன் மூலம் நாம் விலக்கப்பட்ட கோபத்தை எதிர்க்க வேண்டும். பெரிய பெரிய அறிஞர்களுக்கும், உண்மையாளருக்கும் மிகவும் கடினமான கடைசி நிலை கோபத்திலிருந்து தவிர்ந்திருப்பது தான். கோபத்திலிருந்து தவிர்ந்திருப்பது அவசியமாகும்.

**கூறுகின்றார்கள்:** ஆணவம், கர்வம் போன்றவை கோபத்திலிருந்து தான் உருவாகின்றன. இதனைப் போன்றே ஆணவம், கர்வத்தின் விளைவு கோபமே ஆகும். அதாவது கோபம் ஆணவத்தினால் வருகிறது. மேலும் ஆணவம், கர்வத்தினால் கோபம் வருகிறது. இதன் மூலம் ஆணவம், கர்வம் கோபத்திற்குக் காரணமாக அமைகினறன.

**கூறுகின்றார்கள்:** கோபம் எப்பொழுது வரும் என்றால், மனிதன் தனது நஃப்ஸை மற்றவர் மீது முதன்மைப்படுத்தும் போதுதான் வருகிறது. எனது ஜமாஅத்தினர்கள் தமக்குள் ஒருவர் மற்றவரை பெரியவர் சிறியவர் என்று கருதுவதை நான் விரும்புவதில்லை. அல்லது ஒருவர் மற்றவர் மீது கோபம் கொள்வது அல்லது இழிவின் பார்வையுடன் பார்ப்பது போன்றவற்றை விரும்புவதில்லை.

இறைவன் யார் பெரியவர்? யார் சிறியவர்? என்பதனை நன்கறிவான். இது ஒரு வகையான ஏளனம் ஆகும். இதற்குள் இழிவு உள்ளது. ஏளனம் விதை போன்று வளர்ந்து அவனது அழிவிற்கு அதாவது, கர்வம் கொள்பவருடைய அழிவிற்கு காரணமாக அமைந்து விடக் கூடாது என அச்சம் ஏற்படுகிறது.

**கூறுகின்றார்கள்:** சில மனிதர்கள் பெரியவர்களை சந்திக்கும் போது மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொள்கின்றனர். ஆனால் பெரியவர் யாரென்றால் எளியவனின் விஷயங்களை எளிமையாக கேட்பவர் தான் பெரியவர் ஆவார். அவருக்கு ஆறுதல் வழங்க வேண்டும். அவருடைய கூற்றிற்கு கண்ணியம் அளிக்க வேண்டும். அவருக்கு வருத்தம் ஏற்படும் வகையில் எரிச்சலூட்டக்கூடிய வகையில் எந்தவொரு வார்த்தையும் பேசக் கூடாது.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

*நீங்கள் உங்கள் மக்களையே பழித்துரைக்காதீர்கள். ஒருவரையொருவர் பட்டப் பெயர் சூட்டி அழைக்காதீர்கள். ஏனெனில் நம்பிக்கை கொண்ட பின்னர் கெட்ட பெயர் எடுப்பது மிகவும் தீய ஒன்றாகும். கழிவிரக்கங் கொள்ளாதவர்கள் அநீதியிழைப்பவர்களாவர். (49:12)*

**கூறுகின்றார்கள்:** நீங்கள் ஒருவர் மற்றவரை பட்டப்பெயர் கூறி அழைக்காதீர்கள். இந்த செயல் நெறி தவறியவர்களின் செயலாகும். இது இறைவனுக்கு கட்டுப்படாத மக்கள், ஷய்த்தானுக்குப் பின்னால் செல்லக் கூடிய மக்களின் செயலாகும். எவர் ஒருவர் மற்றவரை இழிவுபடுத்துவாரோ அவருக்கு அதே போன்ற நிலைமை ஏற்படாத வரை மரணிக்க மாட்டார். உங்கள் சகோதரர்களை ஏளனமாகப் பார்க்காதீர்கள். ஒரே ஊற்றிலிருந்து அருந்தக் கூடியவர்களில் எவருடைய அதிர்ஷ்டத்தில் அதிக அளவு நீர் அருந்துவது உள்ளது என்பதை யார் அறிவார்?

மதிப்பும் மரியாதையும் பௌதீகக் கோட்பாடுகளால் கிடைக்கப் பெறாது. மாறாக ***இறைவனது பார்வையில் இறையச்சம் உடையவரே பெரியவர் ஆவார். (49:14)***

உண்மையான அறிவு மற்றும் ஞானம் ஆகியவை இறைவன் பக்கம் திரும்பாதவரை கிடைக்கப் பெறாது. அறிவு, சிந்தனை, நுண்ணறிவு போன்றவை இறைவன் பக்கம் குனியாமல், அவன் பக்கம் திரும்பாமல் கிடைக்கப் பெறாது.

**கூறுகின்றார்கள்:** இதன் காரணமாகத்தான் மூஃமினுடைய நுண்ணறிவிற்கு அஞ்சுங்கள். ஏனென்றால், அவர்கள் இறை ஒளியினால் பார்க்கக்கூடியவர்கள் ஆவார்கள்.

சரியான நுண்ணறிவு, உண்மையான அறிவு, இறையச்சம் உருவாகாத வரை கிடைக்கப் பெறாது.

கூறுகின்றார்கள்: நீங்கள் வெற்றி பெற விரும்பினால் அறிவுப்பூர்வமாக செயல்படுங்கள். சிந்தனை செய்யுங்கள். கவனம் செலுத்துவது, சிந்தனை செய்வது பற்றி திருக்குர்ஆன் பலமுறை வலியுறுத்திக் கூறியுள்ளது. மறைவான நூல்கள் மற்றும் திருக்குர்ஆனை ஆராயுங்கள். தூய, நல்ல இயல்புடையவராக விளங்குங்கள். உங்களது உள்ளம் தூய்மை அடைந்த பிறகு, நீங்கள் நல்லறிவுடன் செயல்படுவீர்கள். இறையச்சத்தின்படி செயல்படுவீர்கள். பிறகு இந்த இரண்டு இணைப்பின் மூலம் அந்த நிலைமை ஏற்பட்டு விடும். அதாவது, இது உங்களுடைய உள்ளத்திலிருந்து வெளிப்படும். அப்போது இந்த படைப்பினங்கள் வீணாகப் படைக்கப்பட்டவை கிடையாது என்பது உங்களுக்குப் புரிந்து விடும். மாறாக, இவை உண்மையான படைப்பாளனின் உண்மைத்துவம், அவனது இருப்பை நிரூபிக்கின்றன. இதன் மூலம் மார்க்கத்திற்கு உதவக்கூடிய பல்வேறு வகையான அறிவு மற்றும் திறன்கள் வெளிப்படும்.

பிறகு அல்லாஹ் படைத்தவை யாவும் வீணானவையும் கிடையாது. ஆனால் பொய்யானவையும் இல்லை என்பது உள்ளத்திலிருந்து வெளிப்படும். இறைவன் தூய்மையானவன் ஆவான். பிறகு அவனிடம் எங்களை நெருப்பின் தண்டனையில் இருந்து காப்பாற்று என துஆ செய்வார். இந்த துஆ உள்ளத்திலிருந்து வெளிப்படும் போது அல்லாஹ் இந்த அனைத்துப் படைப்பினங்களையும் வீணாகப் படைக்கவில்லை என்பது தெரியவரும். ஒவ்வொன்றின் படைப்பிற்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. மனிதன் இருக்கின்றான் என்றால் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மதிப்பு இருக்கின்றது. அதற்கு கண்ணியம் அளிப்பது அவசியமாகும். அல்லாஹ்வுடைய படைப்பினங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு நோக்கம் இருக்கின்றது. அதனைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிறகு உங்களுக்கு அல்லாஹ் எந்த ஒன்றையும் வீணாகப் படைக்கவில்லை என்பது தெரிய வரும்.

**பிறகு கூறுகின்றார்கள்:** இதன் மூலம் மார்க்கத்திற்கு பயனளிக்கக் கூடிய பல வகையான அறிவு மற்றும் கலைகள் வெளிப்பட வேண்டும். உங்களுடைய அறிவு வளம் பெறும் போது மார்க்கத்திற்கு பயன்தரக்கூடிய பலவகையான உலக அறிவுகள் வெளிப்படும். எனவே நன்மையில் முன்னேறக்கூடிய எண்ணம் திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெறுவதற்கு அதனை புரிவதற்கு முயற்சி ஏற்படும் போதுதான் உண்டாகும். எனவே உண்மையான மூஃமினாக வேண்டுமென்றால் திருக்குர்ஆனை மிகவும் கவனத்துடன் படிப்பது அவசியமாகும். மேலும் நன்மையின் உண்மையான அறிவு மற்றும் ஞானம் ஆகியவற்றைப் பெறுவதற்கும் இதனை கவனத்துடன் படிப்பது அவசியமாகும். இதன் மூலம் அறிவும் ஞானமும் வளரும்.

**மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:** நீங்கள் ஈருலக வெற்றி கிடைக்க வேண்டும் என்று விரும்பினால், மக்களின் உள்ளங்களை வெல்ல வேண்டும் என்று விரும்பினால் தூய்மையை மேற்கொள்ளுங்கள். அறிவைக் கொண்டு செயல்படுங்கள். இறை கூற்றுகளுக்கு ஏற்ப செயல்படுங்கள். உங்களை நீங்களே சீர்திருத்துங்கள். மற்றவர்களுக்கு நல்லொழுக்கத்தின் முன்மாதிரியாகத் திகழுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் வெற்றி அடைவீர்கள்.

ஒருவர் எவ்வளவு அழகாகக் கூறினார்! இது பார்ஸி மொழியில் இருக்கின்றது. **உள்ளத்திலிருந்து வெளி வரக்கூடிய கருத்துக்கள் உள்ளத்தினுள் இறங்கி விடும்.**

எனவே முதலில் உள்ளத்தை உருவாக்குங்கள். நீங்கள் உள்ளத்தில் விளைவை ஏற்படுத்த விரும்பினால் பிறகு செயல் அடிப்படையில் சிறந்த விளைவை ஏற்படுத்துங்கள். ஏனென்றால் செயல் இல்லாமல் வெறும் சொல் ஆற்றல் மற்றும் மனித ஆற்றல் எந்தப் பயனையும் ஏற்படுத்தி விட முடியாது.

வாயளவில் வீண் பேச்சுப் பேசக்கூடியவர்கள் இலட்சக்கணக்கானோர் உள்ளனர். மவ்லவிகள், உலமாக்கள் என்று அழைக்கப்படும் பலர் மெம்பரில் நின்று தன்னை நபிமார்களுக்கு உதவியாளர், நபிமார்களின் வாரிசு எனக் கூறிக் கொண்டு அறிவுரைகளை வழங்கித் திரிகின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஆணவம், கர்வம் மற்றும் தீய நடத்தையிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். ஆனால் அவர்களுடைய நடத்தை மற்றும் அவர்கள் சுயமாக செய்யும் செயல்கள் ஆகியவற்றை அளவிட, அவர்களது அறிவுரைகள் உங்கள் உள்ளத்தில் எந்த அளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை சிந்தித்துப் பார்த்தாலே போதுமானதாகும்.

நிச்சயமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட மக்களுடைய உள்ளங்களில் இந்த மவ்லவிகளின் கூற்றுக்கள் எந்த விதமான விளைவையும் ஏற்படுத்தி இருக்காது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்காத மக்கள், ஒரு சில படித்த மக்கள், கொஞ்சம் அறிவுள்ள மக்களிடம் நேர்மையான மக்களிடம் இவர்களைப் பற்றி கேட்டால் அவர்கள் மவ்லவிகளைப் பற்றி தவறாகத்தான் கூறுகின்றார்கள். இந்த மவ்லவிகள் சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றும் ஆகும். கூச்சல், குழப்பம் போன்றவற்றை இவர்கள்தான் உருவாக்குகின்றனர் என்கின்றனர்.

எனவே, நமது சொல்லும், செயலும் ஒன்றாக இருக்கும் போது அதன் மூலமாக நமது தப்லீகிற்கான வழிகள் திறக்கும். மேலும் பிறர் மீது தாக்கமும் ஏற்படும். பிறகு புதிய அறிவுகளைக் கற்க வேண்டும் என்பதனைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்.

நான் புதிய அறிவுகளுக்கு நவீன கல்விக்கு எதிராக இருக்கக்கூடிய அந்த மவ்லவிகள் தவற்றில் இருப்பதாகவே காண்கின்றேன். அவர்கள் தனது தவறுகள் மற்றும் பலவீனங்களை மறைப்பதற்காக இவ்வாறு செய்கின்றனர். அவர்களுடைய உள்ளத்தில் இந்த விஷயம் ஆழமாகப் பதிந்து விட்டது. அதாவது புதிய அறிவைப் பற்றிய ஆய்வுகள் இஸ்லாத்தின் மீது தீய எண்ணம் மற்றும் வழிகேட்டலை ஏற்படுத்தி விடும். மேலும் அவர்கள் அறிவு மற்றும் அறிவியல் இஸ்லாத்திற்கு முற்றிலும் முரண்பட்ட விஷயமாகும் என கருதுகின்றனர். ஏனென்றால் தத்துவங்களின் குறைபாடுகளை வெளிப்படுத்துவதற்குரிய ஆற்றல் அவர்களிடம் இல்லை. எனவே தமது இந்த பலவீனத்தை மறைப்பதற்கு இந்த விஷயத்தைக் காரணமாகக் காட்டுகின்றனர். அதாவது புதிய அறிவுகள் கற்பது விலக்கப்பட்டதாகும் என்கின்றனர். அவர்களுடைய ஆன்மா தத்துவங்களுக்கு அஞ்சுகிறது. புதிய கண்டுபிடிப்புகளுக்கு முன்பு ஸஜ்தா செய்கின்றது. ஆனால் அவர்களுக்கு இறை இல்ஹாம்கள் மூலம் கிடைக்கபெறும். உண்மையான தத்துவ ஞானம் கிடைக்கவில்லை. உலகத் தத்துவங்களுக்கு பதில் சொல்ல முடியாமல் நடுங்குகின்றனர். அதனால் இதனை அரவே படிக்காதீர்கள்; பார்க்காதீர்கள் எனக் கூறுகின்றனர். இறை இல்ஹாம்கள் மூலம் கிடைக்க வேண்டிய உண்மையான ஞானம் இவர்களுக்கு கிடைக்கவில்லை. இது திருக்குர்ஆனில் நிரம்பிக் காணப்படுகின்றது. அது மிகவும்

தாழ்மையுடன், எளிமையுடன் இறைவனுடைய வாசலில் தன்னை அர்ப்பணித்து விட்டவருக்கு அதாவது தன்னை இறைவனுடைய சந்நிதானத்தில் வைப்பவருக்கு அவன் முன்பு குனிபவர் மற்றும் அவனிடமே உதவி தேடுபவருக்கு கிடைக்கப் பெறும்.

**கூறுகின்றார்கள்:** மேலும் எவருடைய உள்ளத்திலிருந்தும் அறிவிலிருந்தும் கர்வத்தின் எண்ணம் வெளியேறி விடுமோ மேலும் எவர் தன்னுடைய பலவீனங்களை ஒப்புக் கொண்டவாறு மன்றாடியவாறு உண்மையான அடிமைத்தனத்தை ஏற்றுக் கொள்வாரோ அவருக்கே இந்த ஞானம் கிடைக்கப் பெறும்.

**மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இன்றைய காலத்தில் மார்க்கத்திற்குச் சேவை செய்வதற்காக நவீன கல்வியை கற்பது அவசியமாகும். மார்க்கத்தைப் பரப்புவதற்கு இன்றைய காலத்தின் புதிய அறிவுகளைக் கற்க வேண்டும். மிகவும் கடின முயற்சிகள் எடுத்துக் கற்றுக் கொள்ளுங்கள். கடின உழைப்பை மேற்கொள்ளுங்கள். அறிவியலைப் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கள். முன்னேறுங்கள். இன்றைய காலத்து அஹ்மதி மாணவர்களிடம் குறிப்பாக நான் கூறுவது என்னவென்றால், இதன் பக்கம் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். இதுவும் ஒரு தப்லீகிற்கான வழியாகும். இதுவும் நன்மையைப் பரப்புவதற்கான வழியாகும். இன்றைய காலத்து நவீன அறிவு, அறிவியலைப் பற்றி நன்கு அறிந்திருக்கும் போது பலவிதமான வழிகள் மேலும் திறக்கும்.

**கூறுகின்றார்கள்:** புதிய அறிவுகளைக் கற்றுக் கொள்ளுங்கள். அதுவும் கடின முயற்சியுடன் கற்றுக் கொள்ளுங்கள். மேலும் எனக்கு ஒரு அனுபவம் இருக்கிறது. அதனை நான் ஓர் எச்சரிக்கையாகக் கூற விரும்புகின்றேன். அதாவது எவர் இந்த அறிவில் ஒரு பக்கமாக இருக்கின்றாரோ ஆன்மீக மக்களின் கூட்டத்துடன் சேர்ந்திருக்கவும் செய்யாமல் உலக அறிவிலேயே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வாரோ, அவர்கள் தம்மிடம் எந்த விதமான இறை ஒளியையும் பெற்றிருப்பதில்லை. பொதுவாக அப்படிப்பட்டவர் ஏமாந்து வழிதவறியவர்கள் ஆவார்கள். மேலும் அவர்கள் இஸ்லாத்தை விட்டு தூரம் விலகிச் சென்றவர்கள் ஆவர். அறிவினைக் கற்றுக் கொள்ளுங்கள். அதனுடன் திருக்குர்ஆனின் அறிவையும் கற்றுக் கொள்ளுங்கள். இதன் மூலம் நீங்கள் சரியான பாதையில் பயணிக்க முடியும்.

பிறகு எவரிடம் திருக்குர்ஆனுடைய ஞானம் இருக்கிறதோ அவருடன் தொடர்பை ஏற்படுத்துங்கள்.

**கூறுகின்றார்கள்:** இவர்கள் தான் பெற்ற அறிவுகளை இஸ்லாத்தின் கீழ் கொண்டு வராமல் தலைகீழாக இஸ்லாத்தை அறிவுகளின் கீழ் கொண்டு வருவதற்குரிய பயனற்ற முயற்சிகளை மேற்கொள்கின்றனர். மேலும் தம்மை மார்க்கத்திற்கும் உலகத்திற்கும் சேவை செய்பவர்களாக கருதிக் கொள்கின்றனர். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். இந்தப் பணியை அதாவது மார்க்கச் சேவையை விண்ணின் ஒளியைத் தம்முன் பெற்றுள்ள மனிதரால் மட்டும்தான் செய்ய முடியும். நமக்கு இக்காலத்தில் இந்த ஒளி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றது. எனவே திருக்குர்ஆனுடைய தஃப்ஸீர் மற்றும் அதனை புரிந்து கொள்வதற்கு அன்னாரின் நூல்களைப் படிப்பதும் அன்னாரின் தஃப்ஸீர்களைப் படிப்பதும் மிகவும் அவசியமானதாகும். இதன் பிறகு அறிவியலை மார்க்க அறிவுடன் இணைக்கலாம். இவ்வாறிருந்தால் உலக அறிவு மார்க்க அறிவை மிஞ்சிவிட சாத்தியமே இல்லை. எப்பொழுதும் மார்க்கம் தான் மேன்மை பெறும். மேலும் மார்க்கம் இந்த உலகம் மற்றும் அறிவியலை தனக்கு கீழ் கொண்டு வந்து விடும்.

**பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:** சாபிரு வ ராபிதூ – பொறுமை மேற்கொள்ள அறிவுறுத்துங்கள். மற்றும் எல்லையை பாதுகாத்துக் கொள்ளுங்கள் (3:201).

எவ்வாறு எல்லையில் எதிரி வரம்பு மீறாமல் இருக்க எதிரிகளுக்கெதிராக குதிரை நிற்பது அவசியமானதோ அதே போன்று நீங்களும் தயாராக இருங்கள். பழைய காலங்களில் எல்லைப் பாதுகாப்பிற்கு குதிரைப்படை மிகவும் சிறந்ததாக கருதப்பட்டது. இக்காலத்தில் பலவிதமான புதிய புதிய கண்டுபிடிப்புகள் உள்ளன. அவைகளை நாட்டின் எல்லைப் பாதுகாப்பிற்காக வைத்திருப்பது அவசியமாக இருக்கின்றது.

**கூறுகின்றார்கள்:** எதிரி எல்லை மீறாமல் இருக்க, உங்கள் பக்கம் தாக்குதல் நடத்தாமல் இருக்க எப்படி குதிரை அவசியமானதாக இருக்கின்றதோ அவ்வாறே நீங்களும் தயாராக இருங்கள். எதிரி எல்லை மீறி இஸ்லாத்திற்கு இழப்பை ஏற்படுத்தி விடக் கூடாது.

நான் இதற்கு முன்னரும் கூறியிருக்கின்றேன். நீங்கள் இஸ்லாத்திற்கு உதவி மற்றும் சேவை செய்ய விரும்புகின்றீர்கள் என்றால் இறையச்சம் மற்றும் தூய்மையினை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் நீங்கள் அல்லாஹ்வுடைய பாதுகாப்புக் கோட்டைக்குள் வர முடியும். இதன் பிறகு உங்களுக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பும் உரிமையும் வழங்கப்படும்.

நீங்கள் காண்கின்றீர்கள். முஸ்லிம்களின் வெளிப்படையான ஆற்றல் எவ்வாறு பலவீனமாகி விட்டது. சமுதாயங்கள் இவர்களை இழிவாகவும் ஏளனமாகவும் பார்க்கின்றது. இந்த நிலைமை இன்றிலிருந்து 100 ஆண்டுகளுக்கு முன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலும் அவ்வாறே இருந்தது. மாறாக, இது இன்று அதனை விட அதிகமாகி விட்டது. முஸ்லிம்கள் வெறுப்புடனே பார்க்கப்படுகிறார்கள். அவர்களுடைய தவறான செயல்களினால் அவ்வாறு பார்க்கப்படுகிறார்கள்.

கூறுகின்றார்கள்: உங்களது உட்புற ஆற்றலும் தாழ்வடைந்து பலவீனமாகி விட்டது என்றால் பிறகு எல்லாம் முடிந்து விட்டது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் காலத்தின் இமாமான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் உங்களுடைய ஆற்றலும் பலவீனமாகி விட்டது என்றால், உலக வாழ்க்கையில் மூழ்கி விட்டீர்கள் என்றால், மார்க்கத்தை மறந்து விட்டீர்கள் என்றால் பிறகு முடிவு வந்து விட்டது என்பதை புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உங்களது உள்ளங்களை எந்த அளவு தூய்மையாக்க வேண்டுமென்றால் தூய்மையான ஆற்றல் உங்களில் புகுந்து, அது எல்லையில் நிற்கக்கூடிய குதிரை போன்று உறுதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் அருள் எப்போதும் இறையச்சம் உடையவருடனும், நல்லடியார்களுடனும் இருக்கும். தனது ஒழுக்கம் நடத்தை போன்றவற்றை இஸ்லாத்தின் மீது கறை படியும் அளவிற்கு கடைபிடிக்காதீர்கள். தீய மற்றும் இஸ்லாமிய போதனைகளின்படி அமல் செய்யாத முஸ்லிம்கள் மூலம் இஸ்லாத்திற்கு கறை ஏற்படுகின்றது. ஏதாவது ஒரு முஸ்லிம் மது அருந்தினால் எங்கேயாவது சென்று வாந்தி எடுத்துக் கொண்டேயிருப்பார். தலைப்பாகை அவிழ்ந்து கழுத்தில் தொங்கும். தெருக்களிலும், ஓடைகளிலும், விழுந்து கிடப்பார். காவல் துறையினர் அவரை செறுப்பால் அடிப்பார்கள். இந்துக்களும், கிறித்தவர்களும் அவரைக் கண்டு சிரிப்பார்கள். ஷரீஅத்திற்கு எதிரான அவருடைய இந்த ஒழுக்கங்கெட்ட செயல் அவரை மட்டும் பாதிப்பதில்லை. மாறாக திரை மறைவில் அவருடைய இந்தச் செயலின் விளைவு இஸ்லாம் வரைக்கும் ஏற்படுகின்றது. இப்படி செய்திகள், சிறைப்பிடிப்பு போன்றவற்றை படித்து எனக்கு மிகவும் வேதனை ஏற்படும். இவர்களின் தீய நடத்தையால் முஸ்லிம்கள் ஏளனத்திற்கு ஆளாவதைக் காணும் போது எனது உள்ளம் நிம்மதியிழந்து விடும். ஸிராத்தே முஸ்தகீமைக் கொண்ட இந்த மக்கள் தனது தீய நடத்தையினால் தனக்கு மட்டும் பாதிப்பை ஏற்படுத்திக் கொள்வதில்லை. மாறாக இஸ்லாத்திற்கு இழிவை ஏற்படுத்துகிறார்கள். இந்த நிலைமை இன்றும் கூட இருக்கிறது.

இலண்டனுக்கு வரக்கூடிய பல முஸ்லிம்கள் குறிப்பாக விமானத்தில் பயணம் செய்து வரக்கூடிய பல முஸ்லிம்கள் மேற்கத்திய நாடுகளில் மது அனுமதிக்கப்பட்டது என்பதனால் பயணத்தில், பாகிஸ்தானுக்கு பயணம் செய்யக் கூடியவர்கள், அரபு நாடுகளுக்கு பயணம் செய்யக் கூடியவர்கள் அளவில்லாமல் மது அருந்துகிறார்கள். மேலும் அருகில் இருக்கக் கூடியவர்களையும் கஷ்டப்படுத்துகிறார்கள்.

கூறுகின்றார்கள்: தனது நடத்தை எவ்வாறு மாற்ற வேண்டுமென்றால், நிராகரிப்பாளர்கள் உங்கள் மீது அல்ல. மாறாக இஸ்லாத்தின் மீது செய்யும் ஆட்சேபனைகளை முன் வைப்பதற்கு அவை இடமளிக்கக் கூடாது.

மேலும் உண்மையான வலிமை வாய்ந்தவன் யார் என்பதனை விளக்கியவாறும் ஒரு மூஃமின், ஓர் அஹ்மதி எப்படிப்பட்ட வலிமை கொண்டவராக இருக்க வேண்டும் என்பதனைப் பற்றி கூறுகின்றார்கள்:

நமது ஜமாஅத்திற்கு உடல் வலிமை பெற்றவர்கள், வீரர்கள் அவசியமில்லை. மாறாக ஒழுக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்யக் கூடியவர்கள் தான் தேவைப்படுகின்றார்கள். ஒரு மலையை ஓரிடத்திலிருந்து நகர்த்தும் வலிமை பெற்றவன் உண்மையான பலசாலி இல்லை. மாறாக ஒழுக்கத்தை நல்லதாக மாற்றும் வலிமை பெற்றவனே உண்மையான பலசாலி ஆவான்.

எனவே இதனை நினைவில் கொள்ளுங்கள். அனைத்து விதமான ஆற்றலையும் சக்தியையும் ஒழுக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் செலவு செய்யுங்கள். ஏனென்றால் இதுதான் உண்மையான ஆற்றலும், வலிமையும் ஆகும்.

பிறகு சரியான மத நம்பிக்கை மேலும் நன்னடத்தையின் பக்கம் கவனம் செலுத்துவதைப் பற்றி அன்னார் அறிவுரை கூறுகின்றார்கள்:

இதனைத் தவிர மேலும் இரண்டு பகுதிகள் உள்ளன. இதனை கவனத்தில் கொள்வது உண்மையான நன்னடத்தையாளரின் பணியாக இருக்க வேண்டும். இதில் ஒன்று உண்மையான மார்க்க நம்பிக்கை ஆகும். இது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும். அவன் முழுமையான மற்றும் சரியான மார்க்க நம்பிக்கையின் வழியினை நபி கரீம் (ஸல்) அவர்கள் மூலமாக மிகவும் எளிதாக எவ்வித கஷ்டமுமின்றி நமக்கு வழங்கி விட்டான். எந்த விதமான கஷ்டத்தையும் மேற்கொள்ளாமல் மிகவும் எளிதாக கிடைத்து விட்டது.

கூறுகின்றார்கள்: உங்களுக்கு கிடைத்த இந்த பாதையிலிருந்து இப்போது வரை பல ஆலிம்கள் விலகியுள்ளனர். இறைவனுடைய இந்த அருள் மற்றும் கருணைக்கு நன்றி செலுத்துங்கள். நன்றி செலுத்துவது உண்மையான உள்ளத்துடன் உண்மையான மார்க்க நம்பிக்கைக்குப் பிறகு இரண்டாவது பகுதியில் வரக்கூடியவற்றை செய்வதாகும். மேலும் அதில் உங்களது செயல் மூலமாக அவனிடத்தில் துஆ செய்யுங்கள். மார்க்க நம்பிக்கைகளில் நிலை பெற்றிருப்பதற்கும் நல்ல செயல்களைச் செய்ய வாய்ப்பு கிடைப்பதற்கும் துஆ செய்யுங்கள்.

பிறகு இபாதத்துகளுடைய பிரிவில் மூன்றாவது விஷயம் தொழுகை, நோன்பு, ஸக்காத்து போன்றவைகள் உள்ளன. சிந்தனை செய்து பாருங்கள். தொழுகை இது உலகத்திற்கு வந்துள்ளது. ஆனால் உலகத்திலிருந்து வரவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். குர்ரத்து அய்னி ஃபிஸ்ஸலாத் தொழுகை உலகிற்கு வந்தது. ஆனால் உலகத்திலிருந்து வந்தது கிடையாது. உலகவாதிகளின் பொருள் கிடையாது. உண்மையான மூஃமின்கள் தான் இதன் உரிமையை நிறைவேற்ற முடியும்.

**கூறுகின்றார்கள்:** நமது ஜமாஅத் மறுமை வாழ்வின் மீது கவனம் செலுத்த வேண்டும். லூத் போன்ற சமுதாயங்களின் நிலைமை என்னவாயிற்று? ஒவ்வொருவருக்கும் அவசியம் என்னவென்றால், உள்ளம் கடினமாக இருந்தாலும் வருத்தம் அடைந்தவாறு அழுது மன்றாடுவதற்கான பயிற்சி கொடுக்க வேண்டும். ஒருவேளை உள்ளம் கடினமானதாக இருந்தாலும் முயற்சி செய்ய வேண்டும். திரும்பத் திரும்ப முயற்சி செய்ய வேண்டும். தனக்குள் ஒரு வருத்தத்தை ஏற்படுத்த வேண்டும். உள்ளத்தில் ஒரு கஷ்டத்தை உருவாக்க வேண்டும். இதன் மூலம் மென்மை ஏற்பட வேண்டும். அல்லாஹ்வின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். இபாதத்துகளின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். முழுமையாக இறைவன் பக்கம் குனிய வேண்டும்.

**கூறுகின்றார்கள்:** நமது ஜமாஅத்திற்கு இது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் அவர்கள் புத்தம் புதிய ஆன்மீக அறிவைப் பெறுகிறார்கள். எவராவது ஆன்மீக அறிவைப் பெறுவதாக வாதம் புரிந்து, பிறகு அதன்படி செயல்பட வில்லையென்றால் அது வெறும் பகட்டு ஆகும். எனவே நமது ஜமாஅத் மற்றவர்களுடைய கவனமின்மையில் கவனமற்றவர்களாக ஆகி விடக் கூடாது. அவர்களுடைய உற்சாகம் காய்ந்து போய் இருப்பதைக் கண்டு தனது உற்சாகத்தையும் காய்ந்து போக விடக் கூடாது. மனிதன் பல ஆசைகளைக் கொண்டவனாக இருக்கின்றான்.

மறைவானவை,இறுதி நியதி ஆகியவற்றைப் பற்றி யாருக்குத் தெரியும்? மறைவானவை மற்றும் இறை நியதியைப் பற்றி யாருக்கும் தெரியாது. எப்போது? எது நடக்கும்? என்று யாருக்கும் தெரியாது. உங்களது விருப்பங்களுக்கேற்ப வாழ்க்கை ஒருபோதும் நடக்காது.

**கூறுகின்றார்கள்:** விருப்பங்கள் என்பது வேறு; இறை நியதி என்பது வேறு ஆகும். இந்த விஷயம் தான் உண்மையானதாகும்.

நினைவில் கொள்ளுங்கள். இறைவன் மத்தியில் மனிதனுடைய வாழ்க்கை வரலாறு உண்மையானதாகும். அதில் என்னென்ன எழுதியிருக்கும் என்பது அவனுக்கு என்ன தெரியும்? எனவே உள்ளத்தை விழிப்பூட்டிக் கவனம் செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்விடத்தில் உங்களுடைய வாழ்க்கை நிலைமைகள் சரியாகத்தான் செல்கின்றன. அதிலிருந்து எதுவும் மறைக்கப்படவில்லை. எனவே திரும்பத்திரும்ப தனது உள்ளத்தை ஆராய்ந்து பாருங்கள். அதனை எழுப்புங்கள். இறைவனின் பக்கம் கவனம் ஏற்படுத்துங்கள்.

**மேலும் கூறுகின்றார்கள்:** தக்வாவின் வழிகளை மேற்கொள்ளுங்கள். ஏனென்றால் தக்வாவை ஷரீஅத்தின் சராம்சம் என்று கூறுவார்கள். ஷரீஅத்தினை சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால் ஷரீஅத்தின் மையப்புள்ளி தக்வா ஆகத்தான் இருக்கும். தக்வாவின் நிலைகள் மற்றும் படித்தரங்கள் பல உள்ளன. ஆனால் தேடுபவர் உண்மையாளராக இருந்து கொண்டு ஆரம்ப நிலைகளை, படித்தரங்களை உறுதியிலும் நேர்மையிலும் நிலைநின்றவாறு நன்னடத்தையுடன் கடக்கும் போதுதான் அந்த உயர்வான படித்தரங்களை அவரால் பெற்றுக் கொள்ள இயலும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:** *இன்னமா யத்த கப்பலுல்லாஹி மினல் முத்தகீன் – அல்லாஹ் முத்தகீன்களின் துஆக்களை ஏற்றுக் கொள்கிறான்.* எனவே இது அவனது வாக்குறுதி ஆகும். அவனது வாக்குறுதியில் எந்த விதமான முரண்பாடும் இருக்காது. அவன் ஒருபோதும் தனது வாக்குறுதியை மீற மாட்டான்.

**அவன் கூறுகின்றான்:** *இன்னல்லாஹ லா யுஹ்லிஃபுல் மீஆத்.* எனவே தக்வாவை மேற்கொள்வது, துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நிபந்தனைகள் இருக்கும் போது, ஒரு மனிதன் கவனமற்றவனாக, வழிதவறியவனாக இருந்து கொண்டு துஆ ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என விரும்பினால், அவர் முட்டாள் அல்லது அறிவீனர் அல்லவா? எனவே நமது ஜமாஅத்தின் மக்கள் எந்த அளவு முடியுமோ அந்த அளவு தக்வாவின் வழியினை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான இன்பத்தினைப் பெற வேண்டும். மேலும் ஈமான் வலுவடையச் செய்ய வேண்டும்.

**மேலும் ஓர் அறிவுரையை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:**

பலமுறை இறைவன் புறமிருந்து இல்ஹாம் இறங்கியது. நீங்கள் முத்தகீன்களாக ஆகி விடுங்கள். தக்வாவின் நுண்ணிய வழிகளில் செல்லுங்கள். இறைவன் உங்களுடன் இருப்பான்.

**கூறுகின்றார்கள்:** இதன் மூலம் உள்ளத்தில் மிகப்பெரிய வேதனை உண்டாகிறது. நமது ஜமாஅத் உண்மையான தக்வா மற்றும் தூய்மையை மேற்கொள்வதற்கு நான் என்ன செய்வேன்?

**மேலும் கூறுகின்றார்கள்:** நான் எந்த அளவு துஆ செய்கின்றேன் என்றால், துஆ செய்து, துஆ செய்து பலவீனம் என்னை ஆட்கொண்டு விடுகிறது. சில சமயங்களில் மயக்கம் வரை நிலைமை சென்று விடுகிறது.

**கூறுகின்றார்கள்:** ஒரு ஜமாஅத் இறைவனுடைய பார்வையில் இறையச்சம் உடையதாக ஆகாதவரை இறை உதவிகள் அவர்களுக்கு கிடைக்காது.

**கூறுகின்றார்கள்:** அனைத்து வேத நூல்கள் தவ்ராத், மற்றும் இஞ்சீலின் போதனைகளின் சாராம்சம் தக்வா ஆகும். திருக்குர்ஆன் ஒரே வார்த்தையில் இறைவனுடைய மாபெரும் விருப்பம் மற்றும் எண்ணத்தினை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது தக்வா என்ற இந்த ஒரு வார்த்தையில் அடங்கி விட்டது.

அன்னார் ஜமாஅத்தினருக்கு இந்த துஆவினை செய்வதற்கு ஒரு நேரத்தில் அறிவுறுத்தினார்கள்.

*ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்த(ன்)வ் வஃபில் ஆகிரத்தி ஹஸனத்த(ன்)வ் வகினா அஸாபன்னார்.*

**கூறுகின்றார்கள்:** தவ்பா மனிதனுக்கு பயனற்ற, வீணான ஒரு விஷயம் கிடையாது. மேலும் இதன் விளைவு மறுமையில் மட்டும் ஏற்படக்கூடியது கிடையாது. மாறாக இதன் மூலம் மனிதனுக்கு உலகம் மற்றும் மார்க்கம் இரண்டும் சரியாகி விடும். இதன் மூலம் இவ்வுலகிலும் மறுமையிலும் மகிழ்ச்சி மற்றும் உண்மையான நிம்மதி கிடைக்கும்.

**பாருங்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

***எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் நிம்மதி மற்றும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை வழங்குவாயாக! மறுமையிலும் நிம்மதி மற்றும் திருப்தியை வழங்குவாயாக! மேலும் எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக!***

பாருங்கள். உண்மையில் ரப்பனா என்ற வார்த்தையில் தவ்பா அதாவது பாவமன்னிப்பின் பக்கம் ஒரு நுண்ணிய வழிகாட்டல் உள்ளது. ஏனென்றால் ரப்பனா என்ற வார்த்தை அவன் இதற்கு முன் அதாவது மனிதன் இதற்கு முன்பு ரப் ஆக எண்ணி வைத்திருந்தவற்றிலிருந்து முகம் திருப்பியவாறு, மேலும் இந்த வார்த்தை உண்மையான வேதனை மற்றும் மென்மை இல்லாமல் வெளிப்படவே முடியாது. ரப் என்பது படிப்படியாக முழுமை வரை கொண்டு செல்லக் கூடியவருக்கு கூறப்படும். மேலும் பரிபாலிப்பவனுக்கு கூறப்படும்.

உண்மையில் மனிதன் பல ரப்புகளை உருவாக்கி வைத்திருக்கின்றான். தனது திட்டங்கள் மற்றும் தந்திரங்கள் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருப்பான் என்றால் அதுவே அவனது ரப் ஆகும். அல்லது அவனுக்கு தனது அறிவு அல்லது உடல் வலிமை பற்றிய பெருமை இருக்கும் என்றால் அதுவே அவனது ரப் ஆகும். ஒருவனுக்கு தனது அழகு, பொருள், செல்வம் ஆகியவற்றின் மீது பெருமை இருக்கும் என்றால் அதுவே அவனது ரப் ஆகும். இதுபோன்ற ஆயிரக்கணக்கான காரணிகள் அவனுடன் இணைந்துள்ளன. எப்பொழுது வரை இவற்றை தவிர்த்தவாறு அதனை விட்டு விட்டு ஈடிணையற்ற உண்மையான இறைவன் முன்பு தனது தலையைக் குனியவில்லையோ ரப்பனா என்பதில் முழுமையான வேதனையுடன் மற்றும் உள்ளத்தினை உருவாக்கக் கூடிய குரலில் அவனது சன்னதியில் விழவில்லையோ அப்போது வரை அவன் உண்மையாக இறைவனைப் புரியவில்லை என்பதாகும்.

எனவே இப்படிப்பட்ட உள வேதனை மற்றும் உயிரின் உருக்கம் ஆகியவை மூலமாக அவன் முன்பு தனது பாவங்களை ஒப்புக் கொண்டவாறு தவ்பா செய்யும் போது மேலும் ரப்பனா என்று அழைத்தவாறு உண்மையில் நீ தான் உண்மையான ரப் ஆவாய். நாங்கள் எங்களது தவற்றினால் வழிதவறித் திரிந்து கொண்டிருந்தோம். தற்போது நான் பொய்த் தெய்வங்களை விட்டு விட்டேன். மேலும் உண்மையான உள்ளத்துடன் உன்னை ரப் ஆக ஏற்கின்றேன். மேலும் உனது சன்னதிக்கு வந்துள்ளேன். இவை இல்லாமல் இறைவனை உங்களது ரப் ஆக ஆக்குவது கடினமானதாகும். இந்த நிலைமை ஏற்பட்டால் தான் உண்மையான ரப் அல்லாஹ்வாக ஆக முடியும்.

எப்பொழுது வரை மனிதனுடைய உள்ளத்திலிருந்து மற்ற ரப்புகள் மற்றும் அவற்றின் கண்ணியம், மேன்மை, முக்கியத்துவம், அவசியம் ஆகியவை வெளியேற வில்லையோ அப்போதுவரை உண்மையான ரப் –ஐ ஏற்றுக் கொள்ளமாட்டான்.

சில மனிதர்கள் பொய்யை ரப் ஆக ஆக்கியிருப்பார்கள். அவர்கள் பொய் இல்லாமல் தங்களால் வாழ முடியாது என எண்ணுவார்கள். சிலர் திருட்டு, ஏமாற்றுதல் போன்றவற்றை தனது ரப் ஆக ஆக்கியுள்ளார்கள். இவைகள் இல்லாமல் அவர்களால் வாழ முடியாது என்பது அவர்களுடைய நம்பிக்கை ஆகும். எனவே இவைகள் அவர்களுடைய ரப்புகள் ஆவார்கள்.

பாருங்கள். ஒரு திருடனிடம் கொள்ளையடிப்பதற்கான எல்லா ஆயுதங்களும் இருக்கும்போது, இரவு அவனுக்கு சாதகமாக இருக்கும் போது, எந்தவித காவல்கரனும் விழிக்காமல் இருக்கும் போது அவன் திருடுவதைத் தவிர வேறு ஏதாவது ஒரு வழியினை தனது வயிற்றுப் பிழைப்பிற்காக நாடுவானா? அவன் தனது ஆயுதங்களையே தனது இறைவனாக கருதுவான். எனவே இப்படிப்பட்ட மக்களுக்கு தங்களது சூழ்ச்சி, தந்திரம் போன்றவைதான் ரப் ஆகத் தென்படும். அவர்களுக்கு இறைவனிடம் உதவி வேண்டுவதற்கு என்ன அவசியம் இருக்கின்றது? அவர்கள் தனது பொருள்களையே ரப் ஆக நினைப்பார்கள். எவருடைய பாதைகள் அனைத்தும் அடைக்கப்படுமோ அவருக்கு தான் துஆவுடைய அவசியம் ஏற்படும். வேறெந்த வழியும் இல்லாத போதுதான் துஆ வெளிப்படும். ரப்பனா ஆத்தினா பித்துன்யா... என்று துஆ செய்வது அல்லாஹ்வை மட்டும் தனது ரப் ஆக ஆக்கிக் கொண்டவர்கள் செய்ய வேண்டிய வேலையாகும். அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது. அவர்களது இறைவனைத் தவிர மற்ற அனைத்து பொய்த்தெய்வங்களும் வீணானவையும், ஒன்றுமற்றவையாகும்.

**கூறுகின்றார்கள்:** வகினா அதாபன்னார் நெருப்பு என்பது கியாமத்தில் ஏற்படக்கூடிய நெருப்பு மட்டும் கிடையாது. மாறாக உலகில் ஒரு மனிதர் மிக நீண்ட வாழ்வினைப் பெறும் போது அவர் உலகில் ஆயிரக்கணக்கான நெருப்புகள் இருப்பதை அவர் காண்கின்றார். அனுபவசாலிகள் உலகில் பலவிதமான நெருப்பு இருப்பதை அறிவார்கள். பலவிதமான தண்டனை, அச்சம், பஞ்சம், பட்டினி, நோய்கள், தோல்விகள், இழிவு, அவமானம் ஏற்பட்டு விடுமோ என்ற ஐயம், பலவிதமான துக்கங்கள், சந்ததிகள் மனைவி போன்றோர்களில் கஷ்டங்கள், உறவினர்களினால் ஏற்படும் மனக்கஷ்டங்கள் போன்ற இவை அனைத்தும் நெருப்பு ஆகும். எனவே, மூஃமின் துஆ செய்யும் போது அனைத்து விதமான நெருப்புகளிலிருந்தும் எங்களை காப்பாற்றுவாயாக! நான் உன்னைப் பற்றிப் பிடித்துள்ளேன். நெருப்பு வடிவில் மனிதனுடைய வாழ்க்கை கடினமாக்கக்கூடிய அனைத்து கஷ்டங்களிலிருந்து எங்களை காப்பாயாக என்கின்றான்.

**பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:** உண்மையான அஹ்மதிகளிடம் இறைவனுடைய வாக்குறுதியைப் பற்றி இதற்கு முன்னரும் கூறப்பட்டிருக்கிறது. விளக்கமாக தற்போது கூறக்கூடியதுமாகும்.

**கூறுகின்றார்கள்:** அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். *உம்மைப் பின்பறறுபவர்களை நிராகரிப்பவர்களை விட இறுதி நாள் வரை மேலோங்கச் செய்வேன். (3:56)*

இந்த ஆறுதல் அளிக்கக்கூடிய வாக்குறுதி நாசரேத்தில் பிறந்த இப்னு மர்யமிடம் கூறப்பட்டதாகும். அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் கூறப்பட்டதாகும். ஆனால் நான் உங்களுக்கு நற்செய்தி கூறுகின்றேன். எஷு மஸீஹ் என்ற பெயர்கள் வரக்கூடிய இப்னு மர்யமுக்கும் அல்லாஹ் இதே வார்த்தையைக் கூறித்தான் நற்செய்தி வழங்கியுள்ளான். அதாவது மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கும் அல்லாஹ் இதே நற்செய்தியினைத்தான் வழங்கியுள்ளான். இப்போது நீங்கள் சிந்தியுங்கள். என்னுடன் தொடர்பு கொண்டவாறு இந்த மாபெரும் வாக்குறுதி மற்றும் மாபெரும் நற்செய்தியில் தன்னை இணைத்துக் கொள்ள விரும்புகின்றவர்கள், நஃப்ஸே அம்மாரா உடைய நிலையில் இருக்கக் கூடியவர்களாக இருக்க முடியுமா? நெறி தவறியவர்களாக ஒழுக்கமற்றவர்களாக இருக்க முடியுமா? இல்லை. ஒருபோதும் இல்லை.

அல்லாஹ்வுடைய வாக்குறுதியினை உண்மையில் கண்ணியமாக பார்ப்பவர்கள். மேலும் எனது கூற்றினை கட்டுரைகள் என்று நினைக்காதவர்கள் நினைவில் கொள்ளுங்கள். உள்ளத்தில் நிறுத்துங்கள். மீண்டும் ஒருமுறை என்னுடன் தொடர்புடையவர்களைப் பார்த்துக் கூறுகின்றேன். அந்த தொடர்பு சாதாரண தொடர்பு கிடையாது. மாறாக மிகவும் உறுதியான தொடர்பாகும். இதன் விளைவு என்னை மட்டும் அடைவதில்லை. அவனே உலகில் உண்மை மற்றும் ஞானத்தின் ஆன்மாவை கொண்டு வந்த அந்த தூய்மையான முழுமையான மனிதர் வரை என்னை கொண்டு சென்றான். நான் கூறுகிறேன். இந்த விஷயங்களுடைய விளைவு என்னிடம் மட்டும் ஏற்படுவதானால் எனக்கு எந்த விதமான கவலையும், சிந்தனையும் ஏற்படவிருக்காது. ஆனால் இத்துடன் நின்று விடவில்லை. மாறாக இதன் விளைவு ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் வரையும் மேன்மையான அல்லாஹ் வரையும் சென்றடைந்து விடுகிறது. இப்படிப்பட்ட

நிலையில் நீங்கள் கவனமாக கேட்டு நினைவில் கொள்ளுங்கள். இந்த நற்செய்தியிலிருந்து பங்குபெற விரும்பினால், அதற்கு தகுதியானவராக விரும்பினால், மேலும் கியாமத் வரை காஃபிர்கள் மீது வெற்றி பெறக்கூடியவர்களாக இருக்க விரும்பினால், இதற்கான உண்மையான தாகம் உங்களிடம் இருக்கிறதென்றால், இந்த வாக்குறுதி உங்களில் நிறைவேற நீங்கள் விரும்பினால், நான் கூறுகின்றேன்: நஃப்ஸே லவ்வாமாவுடைய நிலையிலிருந்து நஃப்ஸே முத்மயின்னா உடைய நிலையை அடையாதவரை இந்த வெற்றி கிடைக்கப் பெறாது. இதனைத் தவிர வேறெதுவும் நான் கூறப்போவதில்லை.

நீங்கள் இறைவன் புறமிருந்து வந்த மனிதரிடம் தனது தொடர்பை வைத்துள்ளீர்கள். அவருடைய விஷயங்களை உள்ளத்தின் காதுகளால் கேளுங்கள். மேலும் அதன்படி அமல் செய்வதற்கு முழுமையாகத் தயாராகுங்கள். மேலும் ஏற்றுக் கொண்ட பிறகு மறுத்தல் என்ற அசுத்தத்தில் விழுந்து நிலையான தண்டனையைப் பெற்றவர்களைப் போன்று ஆகி விடாதீர்கள்.

எனவே இவைகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்கு பல்வேறு சமயங்களில் வழங்கிய அறிவுரைகளில் சிலவாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நேரடியாக தொடர்பினை மேற்கொண்டு இந்த விஷயங்களைக் கேட்ட மக்கள் அதிர்ஷ்டசாலிகள் ஆவார்கள். மேலும் நாமும் அதிர்ஷ்டசாலிகள் ஆவோம். நம் வரை இவ்விஷயங்களைக் கொண்டு சேர்த்த அந்த மக்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். மேலும் இதன் மூலம் நமது பைஅத்தின் உண்மையைப் புரிந்து கொள்ள முடிந்தது. மேலும் நன்மை செய்யக் கூடியவர்கள் மற்றும் நன்மையின் ரூஹ் –ஐப் புரிந்தவாறு, பரப்பக் கூடியவர்களாக ஆக முடிந்தது. மேலும் நன்மையைச் செய்வதில் முன்னேறுவதன் பக்கம் எந்நேரமும் முயற்சி செய்யக் கூடியவர்களாகவும் ஆக முடிந்தது. இக்காலத்தில் நம்மை உண்மையான தக்வாவின் வழியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழிநடத்தினார்கள். இதற்கான அறிவு மற்றும் ஞானத்தினையும் வழங்கினார்கள். எனவே நம்மில் ஒவ்வொருவருடைய கடமை என்னவென்றால் இறைவனுக்கு நன்றியுள்ள அடியாராக திகழ்ந்தவாறு தக்வாவின் படி செயல்படக்கூடியவர்களாக வேண்டும்.

அல்லாஹ் இதற்கான வாய்ப்பினை நமக்கு வழங்குவானாக. தற்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு சில ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா மதிப்பிற்குரிய ஷேக் முஹம்மது அஸ்லம் சாஹிப் உடைய மகன் மதிப்பிற்குரிய ஷேக் முஹம்மது நயீம் சாஹிப் உடையதாகும். இவர் துனியாபூரைச் சேர்ந்தவராவார். இவர் முரப்பி ஆவார். இவர் தலைமையகம் ரப்வாவில் பணியாற்றி வந்தார். ரிக்கார்டிங் செட்டிங் பிரிவில் பணியாற்றி வந்தார். மேலும் அலுவலகத்தில் பணிபுரியும் போது மாரடைப்பு ஏற்பட்டது. உடனே மயக்கம் அடைந்து விட்டார். உடனே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். மருத்துவர் முடிந்த அளவு முயற்சி செய்தார்கள். ஆனால் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. அவர் மரணமடைந்து விட்டார்கள். இறைவனடி சேர்ந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவரது வயது 62 ஆகும். மிகவும் மென்மையாக புன்னகையுடன் பழகக் கூடியவராவார். அனைவராலும் விரும்பப்பட்ட ஒரு நபர் ஆவார். கடின உழைப்பை உடையவரும் ஆவார். தனது 18 வயதில் வஸிய்யத் செய்தார். முபல்லிக் ஆக சிராலியோனில் பணியாற்றி வந்துள்ளார். மேலும் பாகிஸ்தானில் பல்வேறு மாவட்டங்களில் ஜமாஅத்தின் முரப்பியாக பணியாற்றி வந்துள்ளார். நான் கூறியது போன்று இறுதியாக ரிக்கார்டிங் பிரிவில் பணியாற்றி வந்தார். மிகவும் சிறந்த முறையில் தனது பணியை செய்து வந்தார். இவர் மர்ஹூம் மவ்லவி ரஷீத் அஹ்மது சாஹிப் சொக்தாயி உடைய மருமகன் ஆவார். இவருக்கு பிள்ளைகள் எதுவும் கிடையாது. வளர்ப்பு மகன் ஒன்றும், இவரது மனைவி மட்டுமே விதவையாக உள்ளனர். அல்லாஹ் இவர்களுக்கு பொறுமையை வழங்குவானாக. மேலும், இவரது தர்ஜாவை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய ஜபர் இக்பால் சாஹிபுடைய மகன் மதிப்பிற்குரிய அஹ்ஸன் கமால் சாஹிபுடையதாகும். இவர் கராச்சி ஹல்காவுடைய சதர் ஆவார். இவர் பஞ்சாபிலுள்ள லையா மாவட்டத்தைச் சேர்ந்தவராவார். இவருடைய கொள்ளுத் தாத்தா அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். அவர்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார். அன்னாருடைய கையில் தான் பைஅத் செய்தார்கள். இதைப் போன்று இவருடைய தாதாவும் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருந்தார். இவரது தாயார் ஹல்காவுடைய லஜ்னா தலைவியாக பணியாற்றுகிறார்கள். இவர் கராச்சியில் ஹல்கா மஹ்முதா பாதில் ஆக இருந்தார்கள. இங்கு மிகவும் கடுமையான எதிர்ப்பு இருந்து வருகிறது. இதற்கு முன்பு இங்கு மூன்று ஷஹாதத்துகள் நடைபெற்றுள்ளன. இவர் ஒரு கம்பெனியில் பணியாற்றி வந்தார். ஜனவரி 18ம் தேதி வழக்கம்போல் தனது பணியில் ஈடுபட்டிருந்தார். 4.30 மணி அளவில் அடையாளம் தெரியாத இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து மொபைலைப் பறிப்பதற்கு முயற்சி செய்துள்ளார்கள். அப்போது அவர் சண்டையிட்டதால் அவரை இரண்டு முறை சுட்டார்கள். சம்பவ இடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். இது ஜமாஅத்தின் ஷஹாதத் இல்லையென்றாலும், அஹ்மதி என்ற காரணத்தினால், வந்த இருவரும் மொபைலைப் பறிப்பதற்கான பாசாங்கு செய்திருக்கிறார்கள். இந்த ஷஹாதத்திற்கு நோக்கம் ஜமாஅத் தான் இருக்கிறது. இருந்த போதிலும் எங்கு வேலை பார்த்து வந்தார்களோ அதனை பாதுகாப்பதற்காக உயிரை அர்ப்பணித்திருக்கிறார். இதுவும் ஷஹாதத் ஆகும். அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்துவானாக. இவருக்கு வயது 30 ஆகும்.

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய இர்ஃபான் அஹ்மது சாஹிப். ஹாபிஸாபாத் மாவட்டத்தைச் சேர்ந்தவராவார். இவர் ஜனவரி 9ம் தேதி மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவர் மவ்லவி ஃபஸல் தீன் சாஹிப் (ரலி) அவர்களுடைய மகன் ஆவார். பாகிஸ்தான் உருவான பிறகு ஃபுர்கான் படையில் இவர் பணியாற்றி வந்தார். இவர் மூஸி ஆவார். ஜமாஅத்துடனும், கிலாஃபத்துடனும் முழுமையான ஒத்துழைப்பு கொடுத்து வந்தார். இவர், மனைவி மற்றும் ஐந்து ஆண் பிள்ளைகளையும், ஐந்து பெண் பிள்ளைகளையும் தனது நினைவாக விட்டு சென்றுள்ளார். இவரது ஒரு மகன் இர்ஃபான் அஹ்மது ஷாஹித் சாஹிப் அவர்கள் ஐவரிகோஸ்ட்டில் முரப்பியாக பணியாற்றி வருகிறார். அங்கு பணிபுரிவதால் ஜனாஸா தொழுகையில் அவரால் பங்கு கொள்ள முடியவில்லை. இவரது ஜனாஸா தொழுகையும் நடைபெறும்.

அல்லாஹ் இவர்கள் அனைவருடனும் கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களை மன்னிப்பானாக. இவர்களது பிரிவால் வாடும் அனைவருக்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 20.01.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456